நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 90/2019

அரசு தரப்புக்காக அ. சா.6 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர்.மூவேந்தன் | தொழில்/பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 16 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

26th day of June 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 02.59 )

நான் தற்போது விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 27.06.2018 அன்று விருத்தாசலம் அரசு மருத்துவமனையில் பணி நேர மருத்துவராக இருந்தபோது காலை 07.05 மணிக்கு பணியில் இருந்தபோது நந்தினி வயது–18, த.பெ.வேல்முருகன், விருத்தாசலம் என்பவரை சின்னபிள்ளை என்பவர் அழைத்து வந்தார். அன்று காலை சுமார் 06.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து தனது அம்மா தீக்குளிக்க முயற்சி செய்தபோது தடுக்க சென்றபோது நந்தினிக்கும் தீ விபத்து ஏற்பட்டதாக உடன் வந்தவர் கூறினார். நந்தினி என்பவரை பரிசோதித்தபோது உடலில் 30 முதல் 35 சதவீதம் தீக்காயம் இருந்தது. முகம், மேல்நெஞ்சு, இரண்டு கைகள், அடிவயிறு, இடது தொடை ஆகிய இடங்களில் தீக்காயம் இருந்தது. அவருக்கு முதலுதவி செய்து மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. நான் பரிசோதனை செய்த சமயத்தில் நந்தினி சுயநினைவுடன் இருந்தார். இதை குறிப்பிட்டு நான் வழங்கிய விபத்து பதிவேடு இதுதான். (நந்தினி என்பவரின் விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது).

27.06.2018 காலை 07.20 மணியளவில் அம்சவள்ளி வயது–37, க.பெ.வேல்முருகன், விருத்தாசலம் என்பவரை அவரது தாயார் சின்னபிள்ளை அழைத்து வந்தார். அன்று காலை சுமார் 06.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து மண்ணெண்ணை ஊற்றி தானே கொளுத்தி கொண்டதாக உடன் வந்தவர் கூறினார். அவரை பரிசோதித்தபோது உடலில் 25 முதல் 30 சதவீதம் வரை தீக்காயம் இருந்தது. தலை, முகம், மேல்நெஞ்சு, இரண்டு கைகளில் தீக்காயம் இருந்தது. அம்சவள்ளி என்பவர் மருத்துவ பரிசோதனையின் போது சுயநினைவுடன் எங்கு இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளும் நிலையில் இருந்தார். அவருக்கு முதலுதவி செய்யப்பட்டு மேல்சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். இதை குறிப்பிட்டு நான் வழங்கிய விபத்து பதிவேடு இதுதான். (அம்சவள்ளி என்பவரின் விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 03.08)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.